## உற்பத்தியின் தன்மை

சாதாரண சேமிப்புக் கணக்கு

## வாடிக்கையாளர்களுக்குக் கிடைக்கும் பயன்கள்

- வட்டி வீதம்

நடப்பு வட்டி வீதத்திற்கு தயவு செய்து http://www.peoplesbank.lk இனைப் பார்க்கவும்.

## ஆரம்ப வைப்புத் தொகையும் கட்டணங்களும்

- ஆரம்ப வைப்புத் தொகை ரூ. 1000/-
- கணக்கின் மீதி 1000/- ரூபாவிற்கு குறையும் பட்சத்தில் மாதாந்தம் ரூ.25/- அறவிடப்படும்.
- கணக்கை மூடும் கட்டணம் - ரூ.500/-
- கணக்கின் பராமரிப்பு மற்றும் ஏனைய கட்டணங்கள்
  - ATM அட்டை வழங்கல்.
  - கணக்கு கூற்றுக்களை வழங்குவதற்கு.
  - கணக்கு புத்தகத்தின் பிரதியை வழங்குவதற்கு.
  - கணக்கு மீதியை உறுதிப்படுத்தி கடிதம் வழங்குவதற்கு.
  - நிலையியற் கட்டளை பதிவு மற்றும் நிதி பரிமாற்றம்.
  - குறுஞ் செய்தி முன்னெச்சரிக்கை. (SMS alert)
  - இணைய வங்கி சேவை கட்டணம்.
- வரிகள்

இலங்கை அரசாங்கத்தினால் மற்றும்/அல்லது ஒழுங்குமுறைப்படுத்தும் அதிகாரசபையினால் அல்லது வங்கியினால் காலத்திற்குக் காலம் கோரப்படுகின்ற நியதிச் சட்ட அறவீடுகள் வட்டியிலிருந்து கழிக்கப்படும்.

## தகைமை

- 18-55 வயதுக்கு இடைப்பட்ட இலங்கைப் பிரசைகளுக்கு இந்தக் கணக்கைத் திறக்க முடியும்.

## கணக்கைத் திறப்பதற்குப் பின்பற்ற வேண்டிய நடைமுறைகள்

- வங்கியின் சாதாரண சேமிப்பு கணக்குகளைத் திறக்கும் படிவத்தை நிரப்பி கீழுள்ள ஆவணங்களுடன் வங்கியின் எந்த ஒரு கிளையிலும் சமர்ப்பிக்க முடியும்.
    - தேசிய அடையாள அட்டையின் (NIC) பிரதி அல்லது தேசிய அடையாள அட்டையின் (NIC) இலக்கத்தினை கொண்ட செல்லுபடியான கடவுச் சீட்டின் / சாரதி அனுமதி பத்திரத்தின் பிரதி.
    - வதிவிட முகவரியும் தேசிய அடையாள அட்டையில் (NIC) குறிப்பிடப்பட்டுள்ள முகவரியும் வேறுபட்டிருந்தால் முகவரியை உறுதிப்படுத்தும் ஆவணம்.
    - வாடிக்கையாளர் விண்ணப்பத்தில் கொடுத்துள்ள நிரந்தர முகவரியிலிருந்து தூர இடத்தில் கிளை அமைந்திருந்தால் அதில் கணக்கைத் திறப்பதற்கான காரணம்.

## பிரதான நியதிகளும் நிபந்தனைகளும்

- கணக்குத் திறக்கும் படிவத்தில் தரப்பட்டுள்ள அந்த உற்பத்தியுடன் சம்பந்தப்பட்ட அனைத்து நியதிகளையும் நிபந்தனைகளையும் வாசித்து அறிந்துகொள்ள வேண்டும். மேலதிக தகவல்களை அறிந்து கொள்வதற்கு வங்கியின் பின்வரும் இணையதளத்தினை நாடவும் : https://www.peoplesbank.lk/